மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 09 ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண். 08/2024
இன்
அசல் வழக்கு எண்.68/2021
-------

ராஜாராம் .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராஜம்மாள்
2. ராமுதாய்
3. ராமலட்சுமி .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 02.06.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மைக்கேல் பாரதி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.A. விஸ்வநாத், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது கடந்த 31.01.2024 ம் தேதி முடிக்கப்பட்ட பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் ரீ–கால் செய்து உத்தரவிட வேண்டி பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு தீர்ப்புக்காக 22.04.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை அசல் வழக்கில் பி.வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்யும்போது நேரமின்மையாலும், மனுதாரரது தரப்பு வழக்கறிஞருக்கு ஏற்பட்ட திடீர் உடல்நல கோளாறுகளாலும் பி.வா.சா.1–டம் பத்திர

பதிவு நடைமுறைகள் மற்றும் அவைகள் குறித்து சில கேள்விகளும் வழக்கிற்கு தேவையான கேளாமால் இருப்பது தற்போதுதான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. மேற்படி கேள்விகளை பி.வா.சா.1–ரிடமிருந்து கேட்டு பெறும்பட்சத்தில் தான் அசல் வழக்கில் தெளிவான முடிவினை எட்டுவதற்கு பேருதவியாக இருக்கும். ஷை கேள்விகள் கேளாமல் விடுபட்டது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமான ஒன்றாகும். மனுதாரர்/வாதி அசல் வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை. ஷை சாட்சியை ரீ–கால் செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையேல் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**இ.ம.எண்.07/2024 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இ.ம.எண்.08/2024–ல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் –**</u>

**3.1.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் மனுவில் ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர ஏனையவற்றை மனுதாரர்/வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் தரப்பில் ரீஓபன் மற்றும் ரீகால் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் கடந்த 31.01.2024 ம் தேதி மற்றும் 14.02.2024 ம் தேதியிலும் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையில் மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் தான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள சொத்துக்கள் மற்றும் மற்ற விஷயங்களை பொறுத்தும் முழுமையாக குறுக்கு விசாரணை செய்துள்ளார். பத்திரப்பதிவு நடைமுறைகள் குறித்து பி.வா.சா.1–ஐ கேள்விகள் கேட்பது என்பது தேவையற்றது. எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ரீ–ஓபன் மற்றும் ரீ–கால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>தீர்வு</u>

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.07/2024 மனுவானது செலவுத்தொகையுடன் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மனுவையும் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

<u>7. இறுதி முடிவு</u>

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்துூர்
இ.ம.எண்.08/2024
இன்
அ.வ.எண்.68/2021
**உத்தரவு**
நாள்–09.06.2025.